சுராவின்

# தமிழ் உரைநூல்

முழு ஆண்டு கையேடு

## 7ஆம் வகுப்பு

முதல் பருவம் | இரண்டாம் பருவம் | மூன்றாம் பருவம்

### சிறப்பம்சங்கள்

- புதிய பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள எல்லாப் பிரிவுகளுக்கும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின் பகுதிகளுக்கான விடைகள் மற்றும் கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- மூன்று பருவங்களுக்குரிய அலகுத்தேர்வு வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- முக்கிய வினாக்கள் (※) சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பருவத் தொகுத்தறித் தேர்வு 2025–26 வினாத்தாள்கள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 98409 26027

SURA'S

© வெளியீட்டாளர்கள்
குறியீட்டு எண் : FY-7-T

எழுதி வழங்கியோர்
**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,
**இரா. ஜலஜா,** M.A.(Tamil), M.A.(Journalism), B.Ed., D.El.Ed.
திருத்தம் செய்தவர்
**வி.கே.செல்வராஜ்,** M.A., B.Ed.,

**Also available for Std - IV to X**

Guides :
- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Science (EM/TM)
- Sura's Social Science (EM/TM)

**Also available for Std - XI, XII**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

## பதிப்பாசிரியர் உரை...

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவச் செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **'சுராவின் 7ஆம் வகுப்புத் - தமிழ் உரைநூல்'** என்னும் வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 7ஆம் வகுப்புத் தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண் பெறச் சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

– பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

SURA'S

**தலைமை அலுவலகம்**
**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**E-mail :** orders@surabooks.com
**Website :** www.surabooks.com

**For Orders Contact**
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

21/05/2026

# முதல் பருவம்

## பொருளடக்கம்


| வ. எண் | பொருண்மை / இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|---|
| மனப்பாடச் செய்யுள் - (1, 2, 3 பருவங்கள் முழுவதும்) | | | | 1 - 3 | ஜூன் |
| நூல்களும் ஆசிரியர்களும் | | | | 5 | |
| 1. | மொழி<br>அமுதத்தமிழ் | **கவிதைப்பேழை** | எங்கள் தமிழ்* | 6 | |
| | | | ஒன்றல்ல இரண்டல்ல | 10 | |
| | | **உரைநடை உலகம்** | பேச்சுமொழியும் எழுத்துமொழியும் | 13 | |
| | | **விரிவானம்** | ஆளுக்கு ஒரு வேலை (பொம்மலாட்டம்) | 18 | |
| | | **கற்கண்டு** | குற்றியலுகரம், குற்றியலிகரம் | 20 | |
| அலகுத் தேர்வு -1 | | | | 30 | |
| 2. | இயற்கை<br>அணிநிழல் காடு | **கவிதைப்பேழை** | காடு* | 31 | ஜூலை |
| | | | அப்படியே நிற்கட்டும் அந்த மரம் | 35 | |
| | | **உரைநடை உலகம்** | தமிழரின் கப்பற்கலை | 40 | |
| | | **விரிவானம்** | விலங்குகள் உலகம் | 46 | |
| | | **கற்கண்டு** | நால்வகைக் குறுக்கங்கள் | 48 | |
| | | **வாழ்வியல்** | திருக்குறள்* | 55 | |
| அலகுத் தேர்வு -2 | | | | 60 | |
| முதல் இடைத் தேர்வு - பாடப்பகுதி இயல் 1, 2 | | | | | |
| 3. | நாடு, சமூகம்<br>நாடு அதை நாடு | **கவிதைப்பேழை** | விடுதலைத் திருநாள் | 61 | ஆகஸ்ட், செப்டம்பர் |
| | | **உரைநடை உலகம்** | தேசியம் காத்த செம்மல் பசும்பொன் உ.முத்துராமலிங்கத்தேவர் | 66 | |
| | | **விரிவானம்** | கப்பலோட்டிய தமிழர் | 71 | |
| | | **கற்கண்டு** | ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம் | 74 | |
| அலகுத் தேர்வு -3 | | | | 84 | |
| முதல் பருவத் தேர்வு - பாடப்பகுதி இயல் 1, 2, 3 | | | | | |


SURA'S

## பொருளடக்கம்

# இரண்டாம் பருவம்



| வ. எண் | பொருண்மை / இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|---|
| நூல்களும் ஆசிரியர்களும் | | | | 86 | அக்டோபர் |
| 1. | கல்வி<br>ஒதுவது ஒழியேல் | **கவிதைப்பேழை** | அழியாச் செல்வம் * | 87 | |
| | | | தேயிலைத் தோட்டப் பாட்டு | 91 | |
| | | **உரைநடை உலகம்** | வாழ்விக்கும் கல்வி | 96 | |
| | | **விரிவானம்** | பள்ளி மறுதிறப்பு | 100 | |
| | | **கற்கண்டு** | இலக்கியவகைச் சொற்கள் | 102 | |
| அலகுத் தேர்வு -1 | | | | 112 | |
| இரண்டாம் இடைத் தேர்வு - பாடப்பகுதி இயல் 1, 2 | | | | | |
| 2. | கலை, அழகியல்<br>கலைவண்ணம் | **கவிதைப்பேழை** | பூத்தொடுத்தல் | 113 | நவம்பர், டிசம்பர் |
| | | **உரைநடை உலகம்** | பேசும் ஓவியங்கள் | 115 | |
| | | **விரிவானம்** | தமிழ் ஒளிர் இடங்கள் | 119 | |
| | | **கற்கண்டு** | தொழிற்பெயர் | 124 | |
| | | **வாழ்வியல்** | திருக்குறள்* | 131 | |
| அலகுத் தேர்வு -2 | | | | 134 | |
| இரண்டாம் பருவத் தேர்வு - பாடப்பகுதி இயல் 1, 2 | | | | | |



SURA'S

# பொருளடக்கம்

# மூன்றாம் பருவம்


| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|---|
| நூல்களும் ஆசிரியர்களும் | | | | 136 | ஜனவரி |
| 1. | நாகரிகம், பண்பாடு, தொழில், வணிகம் | **கவிதைப்பேழை** | விருந்தோம்பல்* | 137 | |
| | | **உரைநடை உலகம்** | திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி | 140 | |
| | | **விரிவானம்** | திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் | 146 | |
| | **நயத்தகு நாகரிகம்** | **கற்கண்டு** | வழக்கு | 148 | |
| **அலகுத் தேர்வு -1** | | | | 156 | |
| 2. | அறம், தத்துவம், சிந்தனை | **கவிதைப்பேழை** | புதுமை விளக்கு* | 157 | பிப்ரவரி |
| | | | அறம் என்னும் கதிர்* | 161 | |
| | | **உரைநடை உலகம்** | ஒப்புரவு நெறி | 164 | |
| | **ஒப்புரவு ஒழுகு** | **விரிவானம்** | உண்மை ஒளி | 169 | |
| | | **கற்கண்டு** | இலக்கணம் - பொது | 172 | |
| | | **வாழ்வியல்** | திருக்குறள்* | 178 | |
| **அலகுத் தேர்வு - 2** | | | | 182 | |
| மூன்றாம் இடைத் தேர்வு - பாடப்பகுதி இயல் 1, 2 | | | | | |
| 3. | மனிதம், ஆளுமை | **கவிதைப்பேழை** | மலைப்பொழிவு* | 183 | மார்ச் |
| | | | தன்னை அறிதல் | 187 | |
| | **மானுடம் வெல்லும்** | **உரைநடை உலகம்** | கண்ணியமிகு தலைவர் | 189 | |
| | | **விரிவானம்** | பயணம் | 193 | |
| | | **கற்கண்டு** | வினா, விடை வகைகள் | 195 | |
| **அலகுத் தேர்வு - 3** | | | | 206 | |
| மூன்றாம் பருவத் தேர்வு - பாடப்பகுதி இயல் 1, 2, 3 | | | | | |
| முதல் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு - 2025-26 வினாத்தாள் விடைகளுடன் | | | | 207-210 | |
| இரண்டாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு - 2025-26 வினாத்தாள் விடைகளுடன் | | | | 211 - 214 | |
| மூன்றாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு - 2025-26 வினாத்தாள் விடைகளுடன் | | | | 215 - 218 | |


(*) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

SURA'S

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : Padi |
| IFSC | : SBIN0005083 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : UCBA0002100 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** |
| Bank Name | : **INDIAN BANK** |
| Bank Branch | : Asiad Colony |
| IFSC | : IDIB000A098 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : KVBL0001154 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **13240200032412** |
| Bank Name | : **FEDERAL BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : FDRL0001324 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **50200031530945** |
| Bank Name | : **HDFC BANK** |
| Bank Branch | : Cenotaph Road, Teynampet |
| IFSC | : HDFC0001216 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **10270882884** |
| Bank Name | : **IDFC FIRST BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDFB0080106 |

SURA'S

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

G Pay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
Email : orders@surabooks.com Website : www.surabooks.com

# தமிழ்



## மனப்பாடச் செய்யுள்

## முதல் பருவம்

இயல் - 1

### எங்கள் தமிழ்

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது.

கொல்லா விரதம் குறியாக
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும் ※
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்.

– நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்

இயல் - 2

### காடு

பச்சை மயில்நடிக்கும்
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சர வங்கலங்கும் – கிளியே
நரியெலாம் ஊளையிடும்

அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ – கிளியே
பூங்குயில் கூவுமடீ!

சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ – கிளியே
இயற்கை விடுதியிலே!

– சுரதா

இயல் - 2

### திருக்குறள்

#### புறங்கூறாமை

4. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

#### வாய்மை

7. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

9. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

#### இறைமாட்சி

10. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த ※
வகுத்தலும் வல்லது அரசு.

– திருவள்ளுவர்

SURA'S

# இரண்டாம் பருவம்

இயல் - 1

## அழியாச் செல்வம் ※

வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயிற் கேடில்லை;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற்று அல்ல பிற.

– சமண முனிவர்

இயல் - 2

## திருக்குறள்

### கல்வி

3. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக் ※
கற்றனைத்து ஊறும் அறிவு.

### தெரிந்து செயல்வகை

6. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

### இடுக்கண் அழியாமை

10. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

– திருவள்ளுவர்

# மூன்றாம் பருவம்

இயல் - 1

## விருந்தோம்பல்

மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு – நீர்உலையுள்
பொன்திறந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்றுறா முன்றிலோ இல்.

– முன்றுறை அரையனார்

இயல் - 2

## புதுமை விளக்கு

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக – செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று. – பொய்கை ஆழ்வார்

இயல் - 2

## அறம் என்னும் கதிர்

இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். – முனைப்பாடியார்

இயல் - 2

## திருக்குறள்

**வினைசெயல் வகை**

2. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

**நாடு**

5. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

**பெருமை**

9. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

– திருவள்ளுவர்

இயல் - 3

## மலைப்பொழிவு

வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
வாழ்க்கை பாலைவனம் – அவர்
தூய மனத்தில் வாழ நினைத்தால்
எல்லாம் சோலைவனம்!

தமையும் வாட்டிப் பிறரையும் வாட்டும்
சண்டை சச்சரவு – தினம்
தன்னாடு என்றும் பிறர்நாடு என்றும்
பேசும் பொய்யுறவு!

இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி
எத்தனை வீண்கனவு – தினம்
இவை இல்லாது அமைதிகள் செய்தால்
இதயம் மலையளவு!

– கண்ணதாசன்

SURA'S

# 1 முதல் பருவம்

SURA'S

# நூல்களும் ஆசிரியர்களும்

| இயல் | பாடப்பகுதி | இடம் பெற்ற நூல்/ தொகுப்பு | ஆசிரியர்கள் | ஆசிரியரின் பிற நூல்கள் படைப்புகள் |
|---|---|---|---|---|
| 1 | எங்கள் தமிழ் (கவிதைப்பேழை) | நாமக்கல் கவிஞர் பாடல்கள் | நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார் | மலைக்கள்ளன், தமிழன் இன்பம், என்கதை, சங்கொலி |
| | ஒன்றல்ல இரண்டல்ல (கவிதைப்பேழை) | | உடுமலை நாராயணகவி | |
| 2 | காடு (கவிதைப்பேழை) | தேன்மழை நூலில் இயற்கை எழில் பகுதி | சுரதா சுப்புரத்தினதாசன் இயற்பெயர் இராசகோபாலன் | அமுதும் தேனும், தேன் மழை, துறைமுகம் |
| | அப்படியே நிற்கட்டும் அந்த மரம் (கவிதைப்பேழை) | அப்படியே நிற்கட்டும் அந்த மரம் | ராஜமார்த்தாண்டன் | கொல்லிப்பாவை (இதழ்) கொங்குதேர் வாழ்க்கை (கவிதைப்பேழை) |
| 3 | விடுதலைத் திருநாள் (கவிதைப்பேழை) | கோடையும் வசந்தமும் | மீரா (மீ.இராசேந்திரன்) | ஊசிகள், குக்கூ, மூன்றும் ஆறும், வா இந்தப் பக்கம் |
| | கப்பலோட்டிய தமிழர் (விரிவானம்) | கடற்கரையினிலே | இரா.பி.சேது (சொல்லின் செல்வர்) | தமிழின்பம், ஆற்றங்கரையிலே, கடற்கரையினிலே, தமிழ் விருந்து, தமிழகம் – ஊரும் பேரும், மேடைப்பேச்சு |

SURA'S

இயல் 1

அமுதத்தமிழ்

# எங்கள் தமிழ்

கவிதைப்பேழை

**ஆசிரியர் குறிப்பு :**



| | |
|---|---|
| **ஆசிரியர்** | : நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார். |
| **பன்முகம் படைத்தவர்** | : தமிழறிஞர், கவிஞர், ஓவியர், விடுதலைப் போராட்ட வீரர், காந்தியக் கவிஞர், நாமக்கல் கவிஞர் எனப் போற்றப்படுகிறார். |
| **கொள்கை** | : காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர், 'காந்தியக் கவிஞர்' என்றும் அழைக்கப்படுகிறார். |
| **முதல் அரசவைக் கவிஞர்** | : இவர் தமிழ்நாட்டு அரசின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர். |
| **இவர் படைத்த நூல்கள்** | : நாமக்கல் கவிஞர் பாடல்கள், மலைக்கள்ளன், தமிழன் இதயம், என்கதை, சங்கொலி உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். |
| **நம் பாடப்பகுதி** | : 'நாமக்கல் கவிஞர் பாடல்கள்' என்னும் நூலிலிருந்து இப்பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது. |

| பாடல் | பொருளுரை |
|---|---|
| அருள்நெறி அறிவைத் தரலாகும்<br>அதுவே தமிழன் குரலாகும்<br>பொருள்பெற யாரையும் புகழாது<br>போற்றா தாரையும் இகழாது | நம் தாய்மொழியாம் தமிழ்மொழி, அருள்நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது. அதுவே, தமிழ்மக்களின் குரலாகவும் விளங்குகிறது. தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேச மாட்டார். தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார். |
| கொல்லா விரதம் குறியாக<br>கொள்கை பொய்யா நெறியாக<br>எல்லா மனிதரும் இன்புறவே<br>என்றும் இசைந்திடும் அன்பறமே | கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும். |
| அன்பும் அறமும் ஊக்கிவிடும்<br>அச்சம் என்பதைப் போக்கிவிடும்<br>இன்பம் பொழிகிற வானொலியாம்<br>எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்.<br>**– நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்** | நம் தமிழ்மொழி, அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்; அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்; நம் தமிழ்மொழி, தேன் போன்ற மொழி ஆகும். |

SURA'S

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அருள் | - | கருணை |
| 2. | நெறி | - | வழி |
| 3. | விரதம் | - | நோன்பு |
| 4. | ஊக்கிவிடும் | - | ஊக்கப்படுத்தும் |
| 5. | குறி | - | குறிக்கோள் |
| 6. | பொழிகிற | - | தருகின்ற |
| 7. | வானொலி | - | வான்மொழி |
| 8. | அருள்நெறி | - | அதுவே |
| 9. | பொருள் பெற | - | போற்றா |
| 10. | கொல்லா | - | கொள்கை |
| 11. | அன்பும் | - | அச்சம் |
| 12. | அருள் | - | பொருள் |
| 13. | கொல்லா | - | எல்லா |
| 14. | அன்பும் | - | இன்பம் |
| 15. | தரலாகும் | - | குரலாகும் |
| 16. | புகழாது | - | இகழாது |
| 17. | குறியாக | - | நெறியாக |
| 18. | ஊக்கிவிடும் | - | போக்கிவிடும் |

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **‘நெறி’ என்னும் சொல்லின் பொருள் ................... .**

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

**விடை: அ) வழி**

2. **‘குரலாகும்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................... .**

அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும்

இ) குர + லாகும் ஈ) குர + ஆகும்

**விடை: ஆ) குரல் + ஆகும்**

3. **வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ................... .**

அ) வான்ஒலி ஆ) வானொலி இ) வாவொலி ஈ) வானெலி

**விடை: ஆ) வானொலி**

### குறுவினா

1. **தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?**
   - ➢ தமிழ் மொழி, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.
   - ➢ அதுவே, தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.
2. **தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**
   - ➢ “பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்!;
   - ➢ தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்!”. இவையே, தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகள் என நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் கூறுகிறார்.

### சிறுவினா

**‘எங்கள் தமிழ்’ என்னும் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.** ※

**தமிழ்மொழியின் பண்புகள்:**

- ➢ தமிழ்மொழி, அருள்நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.
- ➢ அதுவே, தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

SURA'S

**தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகள்:**

- ➢ தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்கள்.
- ➢ தம்மைப் போற்றாதவர்களை இகழ்ந்து பேசமாட்டார்கள்.

**எல்லா மனிதர்களும் இன்புற்று வாழும் நெறிகள்:**

கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ **அன்பும் அறமும்** உதவும்.

**தமிழ்மொழி தேன் போன்றது:**

- ➢ நம் தமிழ் மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்.
- ➢ அஃது அச்சத்தைப் போக்கி இன்பத்தைத் தரும்.
- ➢ நம் தமிழ்மொழி தேன் போன்ற மொழியாகும்.

## சிந்தனை வினா

**கவிஞர், தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

- ➢ தமிழைப் போற்றிப் புகழாத கவிஞர்களே இல்லை எனலாம். நம் கவிஞர் 'எங்கள் தமிழ்' என்னும் கவிதையில் நம் தமிழ் மொழியானது அன்பையும் அறத்தையும் தூண்டக்கூடியது.
- ➢ தேன் பல ஆண்டுகள் கெடாமல் இருப்பதை போலத் தமிழும் என்றும் கெடாமல் பாதுகாப்புடன் திகழ்கிறது.
- ➢ தேன் சாப்பிடச் சாப்பிட உடல் வளம் பெருகும். தமிழ் கற்க கற்க உள்ளம் வளம் பெருகும். அதனால், கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

## கற்பவை கற்றபின்

**1. "எங்கள் தமிழ்" - பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

இப்பாடலை மாணவர்களே இசையுடன் பாடிப் பழக வேண்டும்.

**2. பின்வரும் பாடலைப் படித்துச் சுவைக்க.**

- ➢ கத்தி யின்றி ரத்த மின்றி
- ➢ யுத்த மொன்று வருகுது
- ➢ சத்தி யத்தின் நித்தி யத்தை
- ➢ நம்பும் யாரும் சேருவீர்!... (கத்தியின்றி...)
- ➢ கண்ட தில்லை கேட்ட தில்லை
- ➢ சண்டை யிந்த மாதிரி
- ➢ பண்டு செய்த புண்ணி யந்தான்
- ➢ பலித்த தேநாம் பார்த்திட!... (கத்தியின்றி...) **- நாமக்கல் கவிஞர்**

இப்பாடல் விடுதலை வேட்கையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது. நாமக்கல் கவிஞரது பாடல் இயல்பாகவே சொல் நயம், பொருள் நயம், தொடைநயம் அமையப் பெற்ற ஓர் அற்புத பாடலாகும்.

SURA'S

**மோனை:** செய்யுளில் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனையாகும்.

கத்தியின்றி – கண்டதில்லை, பண்டு – பலித்த

**எதுகை :** செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

கத்தியின்றி – யுத்தமொன்று,

கண்டதில்லை – சண்டையிந்த

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக :

1. ‘குறி’ என்பதன் பொருள் .............. . **விடை:** குறிக்கோள்
2. விரதம் என்பதன் பொருள்............... **விடை:** நோன்பு
3. அச்சத்தைப் போக்கி இன்பம் தருவது............... **விடை:** தமிழ்மொழி
4. எல்லோரும் இன்புற்று வாழ உதவுவது............... **விடை:** அன்பும் அறமும்
5. தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் எனப் போற்றப்பட்டவர் நாமக்கல் கவிஞர்............... **விடை:** வெ.இராமலிங்கனார்

### பொருத்துக :

| | |
|---|---|
| 1. ஊக்கிவிடும் | – அ) நோன்பு |
| 2. பொழிகிற | – ஆ) ஊக்கப்படுத்தும் |
| 3. குறி | – இ) தருகின்ற |
| 4. விரதம் | – ஈ) குறிக்கோள் |

**விடை:**

| | |
|---|---|
| 1. ஊக்கிவிடும் | – ஆ) ஊக்கப்படுத்தும் |
| 2. பொழிகிற | – இ) தருகின்ற |
| 3. குறி | – ஈ) குறிக்கோள் |
| 4. விரதம் | – அ) நோன்பு |

### குறுவினா :

**1. எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ எவை உதவும்?**

கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்பமாக வாழ அன்பும் அறமும் பெரிதும் உதவும் என, நாமக்கல் கவிஞர் தம் பாடல் மூலம் அறிவுறுத்துகிறார்.

**2. தமிழ்மொழி எதனைத் தூண்டும்?**

“நம் தாய்மொழியாம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்!” என நாமக்கல் கவிஞர் தம் பாடல் மூலம் தெரியப்படுத்துகிறார்.

**3. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் காந்தியக் கவிஞர் என ஏன் அழைக்கப்பட்டார்?**

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார் காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு காந்தியத்தைப் பின்பற்றியதால், ‘காந்தியக் கவிஞர்’ என்று அழைக்கப்பட்டார்.

**4. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் படைத்த நூல்களைக் குறிப்பிடுக.**

மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், தமிழன் இதயம், என்கதை, சங்கொலி முதலியன நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் படைத்த நூல்கள்.

☆ ☆ ☆

SURA'S

இயல் 1

அமுதத்தமிழ்

# ஒன்றல்ல இரண்டல்ல

கவிதைப்பேழை

## ஆசிரியர் குறிப்பு



பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் உடுமலை நாராயணகவி. இவர் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியராகவும், நாடக எழுத்தாளராகவும் புகழ் பெற்றவர். தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர். நாட்டுப்புற இசையின் எளிமையைக் கையாண்டு கவிதைகள் எழுதியவர். இவரது பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

## சொல்லும் பொருளும் :

1. ஒப்புமை – இணை
2. முகில் – மேகம்
3. அற்புதம் – வியப்பு
4. உபகாரி – வள்ளல்

## மதிப்பீடு

SURA'S

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம்.........**

அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி **விடை: இ) பரணி**

2. **வானில் .................... கூட்டம் திரண்டால் மழை பொழியும்.**

அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில் **விடை: ஆ) முகில்**

3. **'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................... .**

அ) இரண்டு + டல்ல ஆ) இரண் + அல்ல

இ) இரண்டு + இல்ல ஈ) இரண்டு + அல்ல **விடை: ஈ) இரண்டு + அல்ல**

4. **'தந்துதவும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................... .**

அ) தந்து + உதவும் ஆ) தா + உதவும்

இ) தந்து + தவும் ஈ) தந்த + உதவும் **விடை: அ) தந்து + உதவும்**

5. **ஒப்புமை + இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.......... .**

அ) ஒப்புமைஇல்லாத ஆ) ஒப்பில்லாத

இ) ஒப்புமையில்லாத ஈ) ஒப்புஇல்லாத **விடை: இ) ஒப்புமையில்லாத**

### குறுவினா

1. **தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

"இங்கு வீசும் தென்றலில் தேன்மணம் கமழும். சுவைமிகு கனிகளும் பொன் போன்ற தானியக் கதிர்களும் விளையும். தமிழ்நாட்டின் நன்செய் நிலவளம் ஒன்றிரண்டல்ல பலவாகும்!" எனக் கவிஞர் கூறுகிறார்.

**2. ‘ஒன்றல்ல இரண்டல்ல’ - பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.**

முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தைவிடப் புகழ்பெற்றான் வள்ளல் வேள்பாரி; புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தான் குமண வள்ளல். இவர்கள்போல், புகழ்பெற்று வாழ்ந்த வள்ளல்களின் வரலாறு பலவாகும்.

## சிறுவினா

**தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம். இசைப்பாடலான பரிபாடல், கலம்பக நூல்கள், எட்டுத்தொகை, வான்புகழ் கொண்ட திருக்குறள். அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட சங்க இலக்கியங்கள் எனத் தமிழின் இலக்கிய வளங்கள் ஒன்றிரண்டல்ல, பலவாகும்.

## சிந்தனை வினா

**தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன?**

“அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே” என்று தண்டியலங்கார நூற்பா கூறுகிறது. மனிதன் வாழ்க்கையில் அடைய வேண்டியவை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் என்பது இதன் கருத்து. தமிழ்ச் சிந்தனைக்கும் இந்தியப் பொதுச் சிந்தனைக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. இந்தியப் பொதுச் சிந்தனை மரபின்படி அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கும் அடைய வேண்டியவை. தமிழ்ச் சிந்தனை மரபில் தொல்காப்பியர் காலந்தொட்டே அறம், பொருள், இன்பம் என்ற கருத்து மட்டுமே உண்டு. வீடு பற்றிய கருத்து கிடையாது.

இந்திய மொழிகள் எல்லாவற்றையும் விட, தமிழில்தான் அறநூல்கள் அதிகமாக இருக்கின்றன. நம் தமிழில் சிறந்த அற இலக்கியமாகத் திகழ்வது திருக்குறள். நம்முடைய மானுடர்கள் ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபடும்போது அவற்றைத் திருத்திக் கொள்ள அறக்கருத்துகளையும் நீதிக் கருத்துகளையும் போதிக்கும் தேவை ஏற்படுகிறது. அதனால், தோன்றிய இலக்கியம்தான் அற இலக்கியமாகும்.

SURA'S

## கற்பவை கற்றபின்

**1. தமிழுக்குக் கொடை கொடுத்த வள்ளல்கள் பற்றிய செய்திகளைத் திரட்டுக.**

➢ அதியமான் நெடுமான் அஞ்சி(அதியமான்), வேள் ஆய் ஆண்டிரன் (ஆய்), வல்வில் ஓரி (ஓரி), மலையமான் திருமுடிக்காரி(காரி), கண்டீரக் கோப்பெருநள்ளி (நள்ளி), பாரி, வையாவிக் கோப்பெரும்பேகன் (பேகன்)

**அதியமான் :**

➢ தகடூரை ஆண்ட சங்ககால மன்னர்களுள் ஒருவன். ‘அதியர்’ என்போர் சங்ககாலக் குடிமக்கள். இவர்களின் தலைமகனாக விளங்கியவர்களை ‘அதியர் கோமகன்’ என்றனர்.

➢ ‘கோமான்’ என்பது ‘கோமகன்’ என்பதன் மரூஉ. அதியமான் என்பது ‘அதியர் கோமான்’ என்பதன் மரூஉ. ‘அஞ்சி’ என்பது இவரது இயற்பெயர்.

- இவருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடு 'தலைநீர் நாடு' எனப் பெயர் பெற்றிருந்தது. 'தலைநீர்' என்பது ஒகேனக்கல் அருவியின் சங்ககாலப் பெயர் ஆகும். ஔவையாரின் நெருங்கிய நண்பர் ஆவார்.

**ஆய் :**

- பொதிகை மலைச் சாரலில் உள்ள ஆய்க்குடியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த ஆயர்குல மன்னன் ஆவான்.

**ஓரி :**

- கடையெழு வள்ளல்களுள் ஒருவரான ஓரி சிறந்த வில்லாளி. கொல்லிமலைக்கும் அதைச் சார்ந்த நாட்டிற்கும் தலைவன். இவர் வல்வில் ஓரி எனவும் ஆதன் ஓரி எனவும் அழைக்கப்பட்டார்.

**2. தமிழில் உள்ள பல்வேறு இலக்கிய வடிவங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

- இதிகாசம்
- உரைநடை
- உவமை
- கட்டுரை
- கலந்துரையாடல்
- கலை
- கவிதை
- காப்பியம்
- சிறுகதை
- தொடர்கதை
- சொலவடை
- நாடகம்
- பழமொழி
- பாட்டு
- புதினம்
- விடுகதை

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் .............. **விடை: உடுமலை நாராயணகவி**
2. 'முகில்' என்பதன் பொருள் .............. **விடை: மேகம்**
3. புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தவர் ....... **விடை: குமண வள்ளல்**
4. முல்லைக்குத் தேர் தந்து மழைமேகத்தை விடப் புகழ் பெற்றவர் வள்ளல்............ **விடை: வேள்பாரி**

☆ ☆ ☆

SURA'S

# இயல் 1 அமுதத்தமிழ்

# பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

உரைநடை உலகம்

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **மொழியின் முதல்நிலை கேட்டல், ...................... ஆகியனவாகும்.**
   அ) படித்தல் ஆ) பேசுதல் இ) எழுதுதல் ஈ) வரைதல் **விடை: ஆ) பேசுதல்**
2. **ஒலியின் வரிவடிவம் ...................... ஆகும்.**
   அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல் ஈ) பாட்டு **விடை: ஆ) எழுத்து**
3. **தமிழின் கிளைமொழிகளுள் ஒன்று ...................... .**
   அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம் **விடை: இ) தெலுங்கு**
4. **பேச்சுமொழியை ...................... வழக்கு என்றும் கூறுவர்.**
   அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி **விடை: ஆ) உலக**

### சரியா தவறா என எழுதுக

1. மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது. **விடை:** சரி
2. எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது. **விடை:** சரி
3. பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி. **விடை:** தவறு
4. எழுத்து மொழியில் உடல்மொழிக்கு வாய்ப்பு அதிகம். **விடை:** தவறு
5. பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம். **விடை:** சரி

### பேச்சுமொழி, எழுத்துமொழி பயன்பாட்டின் அடிப்படையில் ஊடகங்களை வகைப்படுத்துக.

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், நூல்கள், திரைப்படம், மின்னஞ்சல்

| வ. எண் | எழுத்துமொழி | பேச்சுமொழி |
|---|---|---|
| 1 | செய்தித்தாள் | வானொலி |
| 2 | நூல்கள் | தொலைக்காட்சி |
| 3 | மின்னஞ்சல் | திரைப்படம் |

### குறுவினா

1. **மொழியின் இரு வடிவங்கள் யாவை?** ※
   - மொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சுமொழித் தேவை.
   - காலம் கடந்து வாழ்வதற்கு எழுத்துமொழித் தேவை.
   - எனவே, பேச்சுமொழி, எழுத்துமொழி இவ்விரு வடிவங்களும் மொழியின் இரு கண்களாகும்.

SURA'S

**2. பேச்சுமொழி என்றால் என்ன?**

- ➢ வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழியாகும்.
- ➢ மொழியின் உயிர் நாடியாக விளங்குவது பேச்சுமொழி.

**3. வட்டாரமொழி எனப்படுவது யாது?**

- ➢ பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும்.
- ➢ மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும்.
- ➢ இவ்வாறு, மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை, 'வட்டார மொழி' என்பர்.
- ➢ **சான்று :** இருக்கிறது – 'இருக்கு', 'இருக்குது', 'கீது' என்று பேசப்படுகிறது.

## சிறுவினா

**1. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.**

| பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|
| உலக வழக்கு என்பர். | இலக்கிய வழக்கு என்பர். |
| சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும். | சொற்கள் முழுமையாக எழுதப்படும். |
| உணர்ச்சிக் கூறுகள் அதிகம். | உணர்ச்சிக் கூறுகள் குறைவு. |
| உடல் மொழியும் குரல் ஏற்றத்தாழ்வும் இணைவதால் அஃது எளிமையாக கருத்தை உணர்த்துகிறது. | உடல் மொழி, குரல் ஏற்றத் தாழ்வு போன்றவற்றிற்கு இடமில்லை. |

**2. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?**

- ➢ ஒரே மொழியைப் பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.
- ➢ அவர்கள் வாழும் இடத்தின் நில அமைப்பு, இயற்கைத் தடைகள் போன்றவற்றின் காரணமாகப் பேசும் மொழியில் சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்படும்.
- ➢ அவர்களுக்கு இடையேயான தொடர்பு குறையும் பொழுது இம்மாற்றங்கள் மிகுதியாகிப் புதிய மொழியாகப் பிரியும். அவ்வாறு உருவாகும் புதிய மொழிகள் 'கிளைமொழிகள்' எனப்படும்.
- ➢ கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய திராவிடமொழிகள், தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் ஆகும்.

## சிந்தனை வினா

**இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?**

இலக்கு + இயம் = இலக்கியம். இலக்கியங்கள் நம் வாழ்வை வளப்படுத்த, வழிகாட்டக்கூடிய ஒளிவிளக்குகளாகத் திகழ்கின்றன. இலக்கியங்கள் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன. அற இலக்கியங்கள் வழங்கும் அற்புதமான கருத்துகளைக் கடைப்பிடித்தால் நம் வாழ்வு பிறரால் பாராட்டப்படும் தன்மையுடையதாக விளங்கும்.

இலக்கியங்கள் வழங்குகின்ற கருத்துகள் எக்காலமும் நிலைத்து நிற்கின்ற கருவூலமாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு இலக்கியமும் ஒவ்வொரு உண்மையைப் பறைசாற்றுகின்றன.

SURA'S

மணிமேகலை பசிப்பிணி அகற்றும் மாண்பை எடுத்துரைக்கிறது. சிலப்பதிகாரம் "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்ற உண்மைகளை உலகிற்கு எடுத்துரைக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு இலக்கியமும் தரும் உண்மையான கருத்துகளைக் கடைப்பிடித்து நாம் வாழ்வின் உன்னத நிலையை அடைவோம்.

இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற நிலை கடந்து அறிவியல் தமிழ், கணினி தமிழ், இணையத் தமிழ், ஊடகத் தமிழ் என்று மொழி வளர்ந்து கொண்டே வருகிறது. இத்தகு வளர்ச்சி தமிழ்மொழியின் உச்சநிலை வளர்ச்சியை நோக்கிச் செல்கிறது என்பதைக் காட்டுகிறது. பலநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் எழுத்து வடிவில் இருப்பதால்தான் நம்மால் இன்றும் படிக்க முடிகிறது.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சுவழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்துவழக்குத் தொடர்களை எழுதி வருக.**

**(எ.கா)** **பேச்சுமொழி** : அம்மா பசிக்கிது. எனக்குச் சோறு வேணும்.

**எழுத்துமொழி** : அம்மா! பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்.

**விடை:**

**பேச்சுமொழி** : நல்லாச் சாப்ட்டான்.
**எழுத்துமொழி** : நன்றாகச் சாப்பிட்டான்.
**பேச்சுமொழி** : நல்லா படிச்சான்.
**எழுத்துமொழி** : நன்றாகப் படித்தான்.
**பேச்சுமொழி** : சந்தியா சாப்ட்டியா?
**எழுத்துமொழி** : சந்தியா சாப்பிட்டாயா?
**பேச்சுமொழி** : வீட்டுப் பாடம் எழுதிட்டியா?
**எழுத்துமொழி** : வீட்டுப்பாடம் எழுதிவிட்டாயா?

**2. பேசும்போது சில நேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. 'ஆ' என்னும் எழுத்து இகரமாக மாறுவதும் உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி அவற்றுக்கு இணையான எழுத்துவழக்குச் சொற்களையும் எழுதுக.**

**(எ.கா)** சொல்லு – சொல்! வந்தியா – வந்தாயா?
நில்லு – நில்! சாப்ட்டியா – சாப்பிட்டாயா?

**விடை:**

- செல்லு – செல்!
- தள்ளு – தள்!
- எழுந்தியா – எழுந்தாயா?
- கொடுத்தியா – கொடுத்தாயா?

SURA'S

## கூடுதல் வினாக்கள்

**பிரித்து எழுதுக.**

1. மேடைப்பேச்சு = மேடை + பேச்சு
2. தொலைக்காட்சி = தொலை + காட்சி
3. இலக்கியத்தமிழ் = இலக்கியம் + தமிழ்
4. ஏற்றத்தாழ்வு = ஏற்றம் + தாழ்வு

**நிரப்புக :**

1. பேச்சுமொழியின் சிறப்புக் கூறுகள் ............ விடை: **உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வு**
2. பேசப்படும் சூழலைப் பொறுத்துப் பேச்சுமொழியின் பொருள் .........விடை: **வேறுபடும்**
3. கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலியவை ......... மொழிகளாகும். விடை: **கிளை**
4. எழுத்துமொழியை................ என்று கூறுவர். விடை: **இலக்கிய வழக்கு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது .................... மொழியாகும்.**

அ) பேச்சுமொழி ஆ) எழுத்துமொழி

இ) இரட்டை வழக்கு மொழி ஈ) இவை ஏதும் இல்லை விடை: **ஆ) எழுத்துமொழி**

2. **சொல்லை ஒலிப்பதில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தால் பொருள் வேறுபடும் என்பதை உணர்த்தும் இலக்கண நூல் ......................**

அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம்

இ) புறப்பொருள் வெண்பா ஈ) தொல்காப்பியம் விடை: **அ) நன்னூல்**

3. **பேச்சுமொழியில் உணர்ச்சிக் கூறுகள்.................**

அ) அதிகமாக இருக்கும் ஆ) குறைவாக இருக்கும்

இ) அளவாக இருக்கும் ஈ) இவை ஏதும் இல்லை

விடை: **அ) அதிகமாக இருக்கும்**

**குறுவினா :**

1. **இரட்டை வழக்குமொழி என்றால் என்ன?**

தமிழில் பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அஃது இரட்டை வழக்குமொழி எனப்படும்.

2. **இரட்டை வழக்கு மொழியைத் தொல்காப்பியர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?**

இரட்டை வழக்கு மொழியைத் தொல்காப்பியர் உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்று குறிப்பிடுகிறார்.

3. **இரண்டாம் நிலை என்று மொழியில் எதனைக் குறிப்பிடுகின்றோம்?**

படிக்கப்படுவதும், எழுதப்படுவதும் மொழியின் இரண்டாம் நிலை எனக் குறிப்பிடுகின்றோம்.

4. **மொழி இல்லையேல் மனித சமுதாயம் முன்னேற்றம் அடைந்திருக்காது. - இக்கூற்றை மெய்ப்பிக்க.**

➢ மொழியின் மூலமாக மனிதர்களின் சிந்தனை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

➢ மொழி இல்லையேல், மனித சமுதாயம் இன்று அடைந்திருக்கும் முன்னேற்றத்தை எட்டியிருக்க முடியாது என்பது முற்றிலும் உண்மையே.

SURA'S

**5. மொழிகள் பல தோன்றக் காரணங்கள் யாவை?**

➢ பழங்காலத்தில் மனிதர்கள் தனித்தனிக் குழுக்களாக வாழ்ந்து வந்தனர்.

➢ அவர்கள், தங்களுக்குள் தனித்தனியான ஒலிக்குறியீடுகளை உருவாக்கிக் கொண்டனர். இதன் காரணமாகவே மொழிகள் பல தோன்றின.

**6. மொழியைப் பற்றி மு. வரதராசனார் கூறுவன யாவை?**

➢ "பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்த நிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவையே அன்றி, வேறுவகை மொழிநிலைகளும் உண்டு.

➢ எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும்" என மு. வரதராசனார் மொழியைப் பற்றிக் கூறுகிறார்.

**7. மனிதர்களின் சிந்தனைகள் காலம் கடந்து வாழ்வதற்குக் காரணமாக இருப்பது ஏன்?**

➢ மனிதர்களின் சிந்தனைகள் காலம் கடந்து வாழ்வதற்குக் காரணமாக இருப்பது எழுத்து மொழியே!

➢ நேரில் காண இயலாத நிலையில் செய்தியைத் தெரிவிக்க எழுத்துமொழி உதவுகிறது.

**சிறுவினா :**

**1. மொழியின் உயிர்நாடியாக விளங்குவது எது? ஏன்?**

➢ மொழியின் உயிர்நாடியாக விளங்குவது பேச்சுமொழியே.

➢ பேச்சுமொழி உணர்வுகளை எளிதாக வெளிப்படுத்தும்.

➢ அது, கருத்தை வெளிப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது.

➢ பேசுபவரின் உடல்மொழியும் ஒலிப்பதில் ஏற்ற இறக்கம் ஆகியவையும் பேச்சுமொழியின் சிறப்புக்கூறுகள் ஆகும்.

**2. பேச்சுமொழியில் பொருள் வேறுபடும் என்பதை உம் பாடப்பகுதி கொண்டு விளக்குக.**

➢ பேசப்படும் சூழலைப் பொறுத்துப் பேச்சுமொழியின் பொருள் வேறுபடும்.

➢ எடுத்துக்காட்டாகக் 'குழந்தையை நல்லாக் கவினிங்க' என்று கூறும்போது 'கவ்னி' என்னும் சொல், 'பேணுதல்' என்னும் பொருளைத் தருகிறது.

➢ 'நில், கவனி செலி' என்பதில் 'கவனி' என்னும் சொல், நின்று, கவனித்துச்செல் என்னும் 'பாதுகாப்புப் பொருளைத் தருகிறது'. அதுபோலவே, பேசும்போது இடம்பெறும் ஏற்ற இறக்கமும் பொருள் வேறுபாட்டைத் தரும்.

➢ எடுத்துக்காட்டாக, என்னால் போக முடியாது என்னும் தொடர் ஓங்கி ஒலிக்கும்போது மறுப்பை உணர்த்துகிறது. மென்மையாக ஒலிக்கும்போது இயலாமையை உணர்த்துகிறது. இவ்வாறு சொல்லை ஒலிப்பதில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தால், பொருள் வேறுபடும் என்பதை,

**'' எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்**
**திரிபும் தத்தமில் சிறிது உள வாகும்''**

என்னும் நன்னூல் நூற்பா உணர்த்துகிறது.

☆ ☆ ☆

SURA'S

இயல் 1

அமுதத்தமிழ்

# ஆளுக்கு ஒரு வேலை

(பொம்மலாட்டம்)

விரிவானம்

## மதிப்பீடு

**பாடப்பகுதி பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.**

**ஆளுக்கு ஒரு வேலை (பொம்மலாட்டம்)**

**(சிறுகதை)**

பொம்மலாட்டம் ஒரு கலை, கதை ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பின்னணியில் கதை மாந்தர்களைப் பேச விட்டுத் கதை சொல்லத் தொடங்குவர். கதை விறுவிறுப்பாகச் சென்று ஒரு கட்டத்தில், சட்டென்று முடியும். இக்காட்சியைப் பார்த்துச் சிறுவர் முதல் பெரியவர் வரை பார்த்து மகிழ்வர். இதோ மெல்லிய ஒடிசலான தேகம் கொண்ட நடுத்தர வயதுக்காரர் பொம்மலாட்டம் மூலம் கதையொன்றைச் சொல்லி அசத்துகிறார். அந்தக் கதையை நாமும் கேட்போமே!

பொம்மலாட்டம் பார்க்க வந்தவர்களை இரு கரம் கூப்பி வணங்கிக் கதைநாயகனை அறிமுகம் செய்கிறார் கதை சொல்லி.

பள்ளிக்கூடம் போகாமலே பாடங்களைப் படிக்காமலே ஊரைச் சுற்றுகிறான் பையன். அவங்க அம்மா எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கல!

"அணை உடைஞ்சு போன வெள்ளம் அழுதாலும் வராது. இப்ப நீ சரியா படிக்கலன்னா வாழ்க்கையிலே முன்னேற முடியாது. ஒழுங்காப் பள்ளிக்கூடம் போயி, படிக்கிற வேலையைப் பாரு" என்கிறார் அப்பா. "படிக்கிறதெல்லாம் எனக்குப் பிடிக்காது!" முகத்தில் அறைந்தாற் போல் பேசுகிறான் நம் கதைநாயகன். அப்பா சத்தம் போடுகிறார், சத்தம்கேட்டு அம்மா வெளியே வராங்க. "ராசா, உழைக்கிற மாடுதான் ஊருக்குள்ளே விலைபோகும்! நீ படிக்கலன்னா ஊர்ல யாரும் மதிக்கமாட்டங்க! அதனால, நீ பள்ளிக்கூடம் போயி நல்லாப் படிச்சுக்க" – இது அம்மாவின் உபதேசம்.

வேறுவழியில்லாம, பையன் பள்ளிக்கூடம் போகிறான். அவனுக்குப் படிப்பதில் நாட்டமில்லை, விளையாட யாராவது கிடைப்பாங்களான்னு பார்க்குறான். அங்கே எறும்பு ஒன்னு போய்கிட்டு இருக்க, "எறும்பே! எறும்பே! என் கூட விளையாட வர்றியா?" – என்றான் பையன். "குடல் கூழுக்கு அழுவுதாம், கொண்டை பூவுக்கு அழுவுதாம் எனக்கு நெறைய வேலை கிடக்கு! நான் கிளம்புறேன்!" நீ அதோ பறக்குதே அந்தத் தேனீகூடப் போய் விளையாடு!" என்றது எறும்பு.

"தேனீ ! தேனீ ! நீ என் கூட விளையாட வர்றியா? என்றான் பையன்." "உனக்குத்தான் வேலை இல்லை, எனக்குமா வேலை இல்லை. போபோ நான் தேன் எடுக்கணும்" பறந்து போனது தேனீ. பையன் கொஞ்சம் தூரம் நடக்கிறான். பொதிமாடு ஒன்றைப் பார்க்கிறான்.

"மாடே! மாடே! சும்மாதானே இருக்கே!; என்கூட விளையாட வர்றியா?" என்றான் பையன்.

"எனக்கு வேலை இருக்கு! அந்த ஆமையைப் போய்ப்பாரு!" என்றது பொதிமாடு. "ஆமையே! ஆமையே! என் கூட விளையாட வர்றியா?" எனக் கேட்டான் பையன்.

"முயலோட போட்டி வச்சிருக்கேன். எனக்கு உன்கூட விளையாட நேரமில்லே நீ அந்த முயலைப் போய் பாரு" என்றது ஆமை.

முயலை விளையாட அழைத்தான். முயலும் விளையாட மறுத்தது.

SURA'S

கடைசியில் குட்டிச்சுவரில் எகிறிக் குதித்தான் பையன். குட்டிச் சுவரில் இருந்து எறும்பு, பூச்சி எல்லாம் கோபத்தோடு அவன் கையில் கால்ல ஏறி நறுக்கு நறுக்கென்று கடித்தன. “அள்ளுறவன் பக்கத்துல இருந்தாலும் கிள்ளுறவன் பக்கத்துல இருக்கக் கூடாதுன்னு” அந்தப் பையன் வலிபொறுக்க முடியாமல் கத்திக் கொண்டே ஓடுறான்.

அம்மாவைப் பார்த்து ‘‘இந்த உலகத்திலே எல்லாரும் அவங்க அவங்க வேலையைப் பாக்குறாங்க!; ஈ, எறும்பு கூடச் சும்மா இல்லாம வேலை செய்யுதுக. எனக்கு இப்பத்தான் புத்தி வந்தது!” என்றான் பையன்.

அம்மா ஆனந்தக் கண்ணீர் சிந்தினாள் மகனின் மன மாற்றத்திற்காக.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பகுதியில் வழங்கி வரும் சொலவடைகளைத் தொகுத்து வருக.**

- வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார்.
- நாய் வித்த காசு கொலைக்கவா செய்யும்.
- குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
- ஊரான் புள்ளய ஊட்டி வளத்தா தன் புள்ள தானா வளரும்.

**2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சொலவடைகளில் எவையேனும் ஐந்தனைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

**(எ.கா.)** குத்துக்கல்லுக்குக் குளிரா? வெயிலா? என்பது போல், என் நண்பன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்ந்து வந்தான்.

- தட்டிப்போட்ட ரொட்டிக்குப் புரட்டிப் போட ஆளு இல்லே என்பதுபோல வறுமையிலே வாடுகிறவங்களுக்குக் கை கொடுக்க ஆள் இல்லாமல் திண்டாடுவாங்க!
- ‘அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்னு’ சொல்லுற மாதிரி நிழலில் படுத்துத் தூங்கினதால ஆமையிடம் தோற்றுப் போச்சாம் முயலு!
- ‘ஆயிரம்கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதும்’ உழைக்கிறவன் மத்தியிலே உதவாக்கரை ஒருத்தன் இருந்தால் அந்தக் கூட்டமே கெட்டுவிடும்.
- ‘புண்ணுக்கு மருந்து போட முடியும் புடிவாதத்துக்கு மருந்து போட முடியுமா?’ வீண் விதண்டாவாதம் செய்கிறவனிடம் பேசி ஜெயிக்க முடியாது.

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. உழைக்கிற மாடுதான் ஊருக்குள்ள ......... போகும். **விடை:** **விலை**
2. அடைமழை விட்டாலும் ............. மழை விடாது. **விடை:** **செடி**
3. ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு ............. போதும். **விடை:** **அந்துப்பூச்சி**
4. பாடிப்பாடிக் குத்தினாலும் ............... அரிசி ஆகுமா? **விடை:** **பதரு**
5. அதிரஅடிச்சா ........... விளையும். **விடை:** **உதிர**

☆ ☆ ☆

SURA'S

இயல் 1

அமுதத்தமிழ்

# குற்றியலுகரம், குற்றியலிகரம்

கற்கண்டு

**நினைவில் கொள்க :**

தமிழ் எழுத்துகளை முதலெழுத்து, சார்பெழுத்து என இரு வகையாகப் பிரிப்பர். உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும். சார்பெழுத்து பத்து வகைப்படும். அவை **உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம்** என்பவனவாகும்.

## மனவரைபடம்

**குற்றியலுகரம்**

கு, சு, டு, து, பு, று

குறுமை + இயல் + உகரம்
= குற்றியலுகரம்

எ.கா.
காசு
எஃகு
பயறு
பாட்டு
பந்து
சால்பு

| | குற்றியலுகரத்தின் வகைகள் | | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|---|
| 1. | நெடில்தொடர்க் குற்றியலுகரம் | - | பாகு, மாசு, பாடு, காது, ஆறு |
| 2. | ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் | - | எஃகு, அஃது |
| 3. | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் | - | அரசு கயிறு ஒன்பது வரலாறு |
| 4. | வன்தொடர்க் குற்றியலுகரம் | - | பாக்கு, பேச்சு, பாட்டு, பத்து, உப்பு, பற்று |
| 5. | மென்தொடர்க் குற்றியலுகரம் | - | பங்கு, மஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று |
| 6. | இடைத்தொடர்க் குற்றியலுகரம் | - | எய்து, மார்பு, சால்பு, மூழ்கு |

**குற்றியலிகரம்**

குற்றியலிகரம் இரண்டு இடங்களில் மட்டும் வரும்

**இடம் - 1**

கொக்கு + யாது = கொக்கியாது
நாடு + யாது = நாடியாது
தோப்பு + யாது = தோப்பியாது
எனப்படுவது + யாது = எனப்படுவதியாது

**இடம் - 2**

கேள் + மியா = கேண்மியா
செல் + மியா = சென்மியா

SURA'S

**முற்றியலுகரம்**

தனிக்குறில் அடுத்து ஓசை குறையாமல் ஒலிக்கும் உகரம் முற்றியலுகரம்

**எ.கா.**
புகு
பசு
விடு
அது
வறு
மாவு
ஏழு

## மதிப்பீடு

**கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

ஆறு, எஃகு, கரும்பு, விறகு, உழக்கு, எட்டு, ஏடு, பந்து, காசு, கொய்து. ※

| நெடில் தொடர் | ஆய்தத் தொடர் | உயிர்த் தொடர் | வன்தொடர் | மென் தொடர் | இடைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஆறு<br>ஏடு<br>காசு | எஃகு | விறகு | உழக்கு<br>எட்டு | கரும்பு<br>பந்து | கொய்து |

## பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக

1. பசு, விடு, ஆறு, கரு - <u>ஆறு</u>
2. பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து – <u>பஞ்சு</u>
3. ஆறு, மாசு, பாகு, அது – <u>அது</u>
4. அரசு, எய்து, மூழ்கு, மார்பு – <u>அரசு</u>
5. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு – <u>எஃகு</u>

## குறுவினா

**1. 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.** ※

குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம். கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்போது, ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கும். இவ்வாறு, தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.

**எடுத்துக்காட்டு:** காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு.

**2. குற்றியலிகரம் என்றால் என்ன?**

- குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்.
- நிலைமொழி ஈற்றில் உள்ள உகரம் வருமொழியோடு சேரும்போது இகரமாகத் திரிந்து தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். இது குற்றியலிகரம் எனப்படும்.
- குற்றியலிகரம் இரண்டு இடங்களில் வரும்.

SURA'S

**எடுத்துக்காட்டு**

| இடம் 1 | இடம் 2 |
|---|---|
| கொக்கு+யாது = கொக்கியாது<br>தோப்பு+யாது = தோப்பியாது<br>நாடு+யாது = நாடியாது<br>எனப்படுவது + யாது = எனப்படுவதியாது | கேள்+மியா = கேண்மியா<br>செல்+மியா = சென்மியா |

## கற்பவை கற்றபின்

**1. ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்ணுப் பெயர்களைப் பட்டியலிட்டு எழுதுங்கள்; அவற்றில் குற்றியலுகரச் சொற்களை எடுத்து எழுதுங்கள்.**

- ஒன்று
- இரண்டு
- மூன்று
- நான்கு
- ஐந்து
- ஆறு
- ஏழு
- எட்டு
- ஒன்பது
- பத்து

**குற்றியலுகரச் சொற்கள் :**

- ஒன்று - மென்தொடர்க் குற்றியலுகரம்
- இரண்டு - மென்தொடர்க் குற்றியலுகரம்
- மூன்று - மென்தொடர்க் குற்றியலுகரம்
- நான்கு - மென்தொடர்க் குற்றியலுகரம்
- ஐந்து - மென்தொடர்க் குற்றியலுகரம்
- ஆறு - நெடில்தொடர்க் குற்றியலுகரம்
- எட்டு - வன்தொடர்க் குற்றியலுகரம்
- ஒன்பது - உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
- பத்து - வன்தொடர்க் குற்றியலுகரம்

**2. குற்றியலுகர எண்ணுப் பெயர்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

- ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து
- நெடில்தொடர்க் குற்றியலுகரம் - ஆறு
- உயிர்தொடர்க் குற்றியலுகம் - ஒன்பது
- வன்தொடர்க் குற்றியலுகரம் - எட்டு, பத்து
- மென்தொடர்க் குற்றியலுகரம் - ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து

**3. குற்றியலுகர எண்ணுப் பெயர்களின் மாத்திரை அளவைக் கண்டுபிடியுங்கள்.**

- ஒன்று - 1 + ½ + ½ = 2
- இரண்டு - 1 + 1 + ½ + ½ = 3
- மூன்று - 2 + ½ + ½ = 3
- நான்கு - 2 + ½ + ½ = 3
- ஐந்து - 2 + ½ + ½ = 3

SURA'S

- ஆறு - 2 + ½ = 2½
- எட்டு - 2 + ½ + ½ = 3
- ஒன்பது - 1 + ½ + 1 + ½ = 3
- பத்து - 1 + ½ + ½ = 2

**4. கு, சு, டு, து, று ஆகிய குற்றியலுகரத்தை இறுதியாகக் கொண்ட ஈரெழுத்துச் சொற்களைத் திரட்டுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| பாகு | காசு | ஓடு | சாது | வறு |
| வாகு | மாசு | பாடு | காது | சேறு |
| ஆகு | தூசு | மாடு | மாது | பெறு |

## தெரிந்து கொள்வோம்

தமிழில் எழுத்துகளைக் குறிப்பிடுவதற்குக் கரம், கான், காரம், கேனம் ஆகிய எழுத்துச் சாரியைகளைப் பயன்படுத்துகிறோம்.

- குறில் எழுத்துகளைக் குறிக்க 'கரம்', 'காரம்', 'கான்' **(எ.கா.)** அகரம், மகரம், மகாரம், மஃகான்
- ஐ, ஔ எழுத்துகளைக் குறிக்க 'கான்' **(எ.கா.)** ஐகான், ஔகான்
- நெடில் எழுத்துகளைக் குறிக்க 'காரம்' **(எ.கா.)** ஆகாரம், ஏகாரம், ஐகாரம், ஔகாரம்
- ஆய்த எழுத்துகளைக் குறிக்க 'கேனம்' **(எ.கா.)** அஃகேனம்
- '**வ்**' என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச் சொற்கள் இல்லை.
- மேலும் **சு, டு, று** ஆகியவை இறுதியாக அமையும் இடைத்தொடர் குற்றியலுகரச் சொற்களும் இல்லை.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. ஆயுத எழுத்தைக் குறிக்க ............. என்ற அசைச் சொல்லைப் பயன்படுத்துகிறோம்.**

அ) கரம் ஆ) கான் இ) கேனம் ஈ) கோடை

விடை: **அ) கேனம்**

**2. ஐ, ஔ எழுத்துகளைக் குறிக்க ........... என்ற அசைச் சொல்லைப் பயன்படுத்துகிறோம்.**

அ) கேனம் ஆ) கரம் இ) காரம் ஈ) கான்

விடை: **ஈ) கான்**

**3. குற்றியலுகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு ............... வகையாகப் பிரிக்கப்படும்.**

அ) 3 ஆ) 5 இ) 6 ஈ) 1

விடை: **இ) 6**

**4. தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ..............**

அ) நெடில் தொடர்க் குற்றியலுகரம் ஆ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

இ) இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஈ) மென்தொடர்க் குற்றியலுகரம்

விடை: **அ) நெடில் தொடர்க் குற்றியலுகரம்**

SURA'S

5. **ஈரெழுத்துச் சொற்களாக மட்டும் அமையும் குற்றியலுகரம் எது?**

அ) மென்தொடர்க் குற்றியலுகரம் ஆ) நெடில்தொடர்க் குற்றியலுகரம்

இ) இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஈ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

விடை: **ஆ) நெடில் தொடர்க் குற்றியலுகரம்**

6. **தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ................**

அ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆ) வன்தொடர்க் குற்றியலுகரம்

இ) நெடில்தொடர்க் குற்றியலுகரம் ஈ) இடைத்தொடர்க் குற்றியலுகரம்

விடை: **அ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**

7. **தன் ஒரு மாத்திரை அளவில் இருந்து குறுகி ஒலிக்கும் இகரம் ............... எனப்படும்.**

அ) குற்றியலுகரம் ஆ) குற்றியலிகரம்

இ) முற்றியலுகரம் ஈ) ஐகாரக்குறுக்கம் விடை: **ஆ) குற்றியலிகரம்**

8. **குற்றியலிகரம் ............... இடங்களில் மட்டும் வரும்.**

அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஆறு விடை: **அ) இரண்டு**

9. **'மியா' என்பது ஓர் அசைச்சொல். இச்சொல்லில் வரும் 'மி'யில் உள்ள இகரம் ...............**

அ) குற்றியலிகரம் ஆ) குற்றியலுகரம்

இ) முற்றியலுகரம் ஈ) மகரக்குறுக்கம் விடை: **அ) குற்றியலிகரம்**

**நிரப்புக :**

1. சால்பு – இது ............. ஆகும். விடை: **இடைத்தொடர்க் குற்றியலுகரம்**
2. கயிறு – இது .............. ஆகும். விடை: **உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**
3. .... என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச் சொற்கள் இல்லை. விடை: **வ்**

**பொருத்துக :**

1. பாடு, மாசு – அ) ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
2. அஃது – ஆ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
3. வரலாறு – இ) வன்தொடர்க் குற்றியலுகரங்கள்
4. பாட்டு, பத்து – ஈ) நெடில்தொடர்க் குற்றியலுகரங்கள்
5. மஞ்சு – உ) இடைத்தொடர்க் குற்றியலுகரம்
6. மூழ்கு – ஊ) மென்தொடர்க் குற்றியலுகரம்

விடை: **1-ஈ), 2- அ), 3-ஆ), 4-இ), 5 - ஊ), 6 - உ)**

**விடையளி :**

1. **முதல் எழுத்து என்றால் என்ன?**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய் எழுத்துகள் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் எனப்படும்.

2. **சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சார்பெழுத்துப் பத்து வகைப்படும். அவை

| | | |
|---|---|---|
| உயிர்மெய் | ஆய்தம் | உயிரளபெடை |
| ஒற்றளபெடை | குற்றியலுகரம் | குற்றியலிகரம் |
| ஐகாரக்குறுக்கம் | ஔகாரக்குறுக்கம் | மகரக்குறுக்கம் |
| ஆய்தக்குறுக்கம் | | |

SURA'S

**3. முற்றியலுகரம் என்றால் என்ன?**

- தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் 'வல்லின உகரங்கள்' ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும்.
- வல்லினம் அல்லாத உகரங்கள் எப்போதும் முழுமையாகவே ஒலிக்கும்.
- இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர். **(எ.கா.)** புகு, பசு, விடு, அது, வறு

**4. குற்றியலுகரத்தின் வகைகளைப் பற்றி கூறுக.**

குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவை,

- நெடில்தொடர்க் குற்றியலுகரம்
- ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
- உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
- வன்தொடர்க் குற்றியலுகரம்
- மென்தொடர்க் குற்றியலுகரம்
- இடைத்தொடர்க் குற்றியலுகரம்

**5. நெடில்தொடர்க் குற்றியலுகரம் - சான்றுடன் விளக்குக.**

- தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம், 'நெடில்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.
- இவை ஈரெழுத்துச் சொற்களாக மட்டும் அமையும்.
- **(எ.கா.)** பாகு, மாசு, பாடு, காது

**6. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் - சான்றுடன் விளக்குக.**

ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம், 'ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும். **(எ.கா.)** எஃகு, அஃது.

**7. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - சான்றுடன் விளக்குக.**

தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம், 'உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

**(எ.கா.)** அரசு (ர – ர் + அ), கயிறு (யி – ய்+இ), ஒன்பது (ப – ப்+அ), வரலாறு (லா – ல் + ஆ)

**8. வன்தொடர்க் குற்றியலுகரம் - சான்றுடன் விளக்குக.**

வல்லின (க், ச், ட், த், ப், ற்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம், 'வன்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

**(எ.கா.)** பாக்கு, பேச்சு, பாட்டு, பத்து, உப்பு, பற்று

**9. மென்தொடர்க் குற்றியலுகரம் - சான்றுடன் விளக்குக.**

மெல்லின (ங், ஞ், ண், ந், ம், ன்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம், 'மென்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

**(எ.கா.)** பங்கு, மஞ்சு, பண்பு, பந்து, அம்பு, கன்று.

**10. இடைத்தொடர்க் குற்றியலுகரம் - சான்றுடன் விளக்குக.**

இடையின (ய், ர், ல், வ், ழ், ள்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம், 'இடைத்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும். **(எ.கா.)** எய்து, மார்பு, சால்பு, மூழ்கு.

SURA'S

**11. தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்குமா?**

தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள், ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும்.

**12. ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கும் உகரம் எது?**

ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கும் உகரம் முற்றியலுகரம், எனப்படும். **(எ.கா.)** புகு, பசு, விடு, அது, வறு.

## மொழியை ஆள்வோம்

**கேட்க :**

**தமிழின் சிறப்பைப் பற்றிய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்க.**

**உயர்திரு. ச.பாலன் அவர்களின் சொற்பொழிவு:**

- மிக மிக உயர்ந்த மொழி தமிழ்மொழி.
- பேரறிஞர்கள் பலர் தங்கள் நூல்கள் வாயிலாகத் தமிழ்மொழியின் சிறப்பை விரிவாக எடுத்துரைத்துள்ளனர்.
- "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார் மகாகவி பாரதியார்.
- "கம்பனைப் போல் வள்ளுவரைப் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்தது இல்லை" என்றார் பாரதியார்.
- பெருமை மிக்க நூல்களும் அறிஞர்களும் சிறப்பித்துப் பாடிய தமிழ் உலக அளவிலே மிகச் சிறந்த ஒரு மொழியாகப் போற்றப்படுகின்றது.
- செம்மொழி என்றால் பிறமொழிகளின் தாக்கம் இல்லாமலும் சில மொழிகளுக்குப் தாயாகவும் இலக்கண இலக்கிய வளமுடையதாகவும் இருக்க வேண்டும்.
- கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகியவற்றிற்குத் தாய்மொழியாக இருக்கிறது நம் தமிழ்மொழி.
- தமிழின் பெருமையை விளக்கும் வண்ணம் அறிஞர்கள் பலர் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

**கவிக்கோ அப்துல்ரகுமானின் உரை :**

- தமிழ்மொழி பேசுவதற்கு, அதிகம் மூச்சு விடவேண்டியது இல்லை.
- தமிழ், உலகத்திலேயே உயர்ந்தமொழி.
- ஆதி மொழி, தொன்மை மொழி தமிழ் மொழியாகும்.
- இரண்டு நாடுகளின் அரசாங்க மொழி இலங்கை, சிங்கப்பூர்.
- மலேசியாவில் ஒரே கல்விமொழி உள்ளது.
- செம்மொழிகளில் முழுமையான இலக்கண வடிவம் கொண்டது, தமிழ்மொழி தொல்காப்பியம்.

SURA'S

## கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக

### 1. நான் அறிந்த பழமொழிகள்

வணக்கம்! அன்னைத் தமிழில் வணங்குகிறேன்! நான் அறிந்த பழமொழிகளைப் பற்றி இங்குப் பேச வந்துள்ளேன்.

**1. முயற்சி திருவினையாக்கும் :**

**பழமொழி விளக்கம் :** முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து எந்தவொரு செயலையும் செய்து வந்தால் வாழ்வில் உயர்வு அடையலாம் என்பதே இப்பழமொழியின் விளக்கம். 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்பதை உணர்ந்து தொடர்ந்து முயற்சி செய்தால் வாழ்வில் வெற்றி பெறலாம் என்பதே இப்பழமொழி உணர்த்தும் நீதி.

**2. இளமையில் கல் :**

**பழமொழி விளக்கம் :** மனித வாழ்வில் கல்வி இன்றியமையாதது. ஆனால் கற்க வேண்டிய இளம் வயதில் கல்வி கற்க வேண்டும். இளமையில் மட்டுமே கல்வியைக் கற்க முடியும், கற்க வேண்டும் என்பது இப்பழமொழியின் நீதியாகும்.

**3. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் :**

**பழமொழி விளக்கம் :** வாழ்க்கையில் வெற்றி பெற நினைப்பவர்கள் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்போது அந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும்.

**4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை :**

**பழமொழி விளக்கம் :** நாம் பசியால் வாடிய பொழுது நமக்கு உணவளித்தவரை, என்றுமே மறக்கக்கூடாது. நம்முடைய உள்ளத்தில் என்றுமே அவர்களை நினைக்க வேண்டும்.

**5. கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு :**

**பழமொழி விளக்கம் :** எனக்கு எல்லாம் தெரியும் என்று செருக்குக் கொள்ளக்கூடாது. ஏனெனில், நாம் கற்றுக் கொண்டது நமது கையினைப் போன்ற சிறிய அளவே. கல்லாதது உலகளவு உள்ளது என்பதே இப்பழமொழியின் விளக்கம். 'எல்லாம் தெரியும்!' என்ற செருக்கு ஒருவனுக்கு இருக்கக்கூடாது! என்பதை உணர்த்துவதே இப்பழமொழியின் நீதியாகும்.

## கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக

### தாய்மொழிப் பற்று

(முன்னுரை – மொழி பற்றிய விளக்கம் – தாய்மொழி – தாய்மொழிப் பற்று – தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர் – நமது கடமை – முடிவுரை)

**முன்னுரை:**

அன்னைத் தமிழ்! இன்பத் தமிழ்! இனிய தமிழ்! பைந்தமிழ்! செந்தமிழ்! எனப் பலவாறு போற்றிப் பேசும் நம் தாய் மொழியாம் தமிழ் மொழி, உலக மொழிகளில் தொன்மையானது நம் தமிழ்மொழி, பழமையும், புதுமையும், நிறைந்த சிறந்த மொழி. தமிழ் மொழியைப் பற்றி இக்கட்டுரையில் ஆய்வதே, நம் சீரிய நோக்கமாகும்.

**மொழி பற்றிய விளக்கம்:**

மனிதன் தன் எண்ணங்களை மனித உணர்ச்சிகளைப் பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக அவனால் உருவாக்கப்பட்டதே மொழியாகும். அஃது ஒருவர் கருத்தை மற்றொருவர் அறிந்து செயல்பட உதவுகிறது. வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சு மொழியாகும். கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது எழுத்துமொழியாகும்.

**தாய்மொழி:**

அவரவர் தாய் மொழியே அவரவர்க்கு உயர்வாகும். தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ஒவ்வொருவரும் தமிழின் பெருமையை, அதன் தொன்மையைக் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும். தாய்மொழி மூலம் கல்வி கற்றால் உணர்ச்சியும் உணர்வும் ஒரு சேர மனித இனத்தினை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**தாய்மொழிப் பற்று:**

தன்னிகரில்லாத தமிழ் என்றும் "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" – (தமிழ்விடு தூது)
'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்றும் பாரதிதாசன் பைந்தமிழ் இனிமையைப் போற்றிப் பாடுகிறார். எண்ணற்ற வேர்ச் சொற்களால் புதுப்புது சொற்களை ஆக்கிக் கொள்ளும் திறன் படைத்தது, தமிழ்.

தமிழின் எழுத்து வகைப்பாடும் வரிசை முறையும் மொழியியலாளரையும் வியக்க வைப்பன.

**தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர்:**

➢ சூரிய நாராயண சாஸ்திரி என்ற தன்னுடைய பெயரைப் 'பரிதிமாற்கலைஞர்' என மாற்றிக் கொண்டவர். தாய்மொழி மீது மிகுந்த பற்றும் அக்கறையும் கொண்டவர்.
➢ வேதாச்சலம் என்ற தம் பெயரை, 'மறைமலையடிகள்' என மாற்றிக் கொண்டவர். செந்தமிழில் கட்டுரைகள் எழுதிப் புகழ் பெற்றவர்.

**நமது கடமை:**

➢ தாய்மொழியில் கல்வி கற்க வேண்டும்.
➢ தாய்மொழியில் சொற்களஞ்சியம் பெருக்க வேண்டும்.
➢ தாய்மொழியில் சாதனைகள் பல படைக்க வேண்டும்.

**முடிவுரை:**

ஒண்டமிழ், வான்தமிழ், தேன்தமிழ், பைந்தமிழ் என்று பலவாறு போற்றிப் புகழ்பாடும் தாய்மொழியாம் தமிழில், எண்ணற்ற கருத்துக் குவியல்கள் பொதிந்துள்ளன. அனைத்தையும் நாம் வாழ்நாளில் பயன்படுத்தி இன்புற வேண்டும்!

SURA'S

## மொழியோடு விளையாடு

**தொகைச் சொற்களை விரித்து எழுதுக.**

(எ.கா.) இருதிணை – உயர்திணை, அஃறிணை

- **முக்கனி** : மா, பலா, வாழை
- **முத்தமிழ்** : இயல், இசை, நாடகம்
- **நாற்றிசை** : கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு
- **ஐந்திணை** : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
- **அறுசுவை** : இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கசப்பு, உவர்ப்பு

### இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக

(எ.கா.) அரசுக்குத் தவறாமல் **வரி** செலுத்த வேண்டும்.
ஏட்டில் எழுதுவது **வரி** வடிவம்.

1. மழலை பேசும் **மொழி** அழகு.
இனிமைத் தமிழ் **மொழி** எமது
2. அன்னை தந்தையின் கைப்பிடித்துக் குழந்தை **நடை** பழகும்.
அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்குமொழி **நடை**.
3. நீ அறிந்ததைப் பிறருக்குச் **சொல்**.
எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது **சொல்**.
4. உழவர்கள் நாற்று **நட** வயலுக்குச் செல்வர்.
குழந்தையை, "மெதுவாக **நட**!" என்போம்.

SURA'S

## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள்**

1. கடிதங்கள், கட்டுரைகள் போன்றவற்றை எழுதும்போது திருத்தமான மொழி நடையையே கையாள்வேன்.
2. பொம்மலாட்டம், தெருக்கூத்து போன்ற நாட்டுப்புறக் கலைகளைப் போற்றுவேன்.

### படிப்போம்! பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. ஊடகம் | - Media | 5. பருவ இதழ் | - Magazine |
| 2. மொழியியல் | - Linguistics | 6. பொம்மலாட்டம் | - Puppetry |
| 3. ஒலியியல் | - Phonology | 7. எழுத்திலக்கணம் | - Orthography |
| 4. இதழியல் | - Journalism | 8. உரையாடல் | - Dialogue |

☆ ☆ ☆

# அலகுத் தேர்வு - 1

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (3 × 1 = 3)

1. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .................... .

அ) வான் ஒலி ஆ) வானொலி

இ) வாவொலி ஈ) வானெலி

2. வானில் .................... கூட்டம் திரண்டால் மழை பொழியும்.

அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்

3. தமிழின் கிளைமொழிகளில் ஒன்று ...................... .

அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (3 × 1 = 3)

4. 'முகில்' என்பதன் பொருள் ...............

5. பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுப்வர் ...........

6. .......... என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச் சொற்கள் இல்லை.

## III. பொருத்துக. (4 × ½ = 2)

7. ஊக்கிவிடும் - நோன்பு
8. பொழிகிற - ஊக்கப்படுத்தும்
9. குறி - தருகின்ற
10. விரதம் - குறிக்கோள்

## IV. பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக. (2 × ½ = 1)

11. பசு, விடு, ஆறு, கரு –

12. பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து –

## V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும். (3 × 2 = 6)

13. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
14. 'ஒன்றல்ல இரண்டல்ல' – பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.
15. பேச்சுமொழி என்றால் என்ன?
16. முதல் எழுத்து என்றால் என்ன?

## VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும். (2 × 3 = 6)

17. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?
18. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
19. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

## VII. அடிமாறாமல் எழுதுக. (4)

20. 'எங்கள் தமிழ்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆ ☆ ☆

SURA'S